சுருக்கம்

உயர்நிலைக் குழு பரிந்துரை – நகராட்சி நிதியில் செய்யக்கூடிய எந்த சேவையையும் நகராட்சிகளே வழங்கும் அதிகாரம் – பரிந்துரையை ஏற்று ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3)துறை

அரசாணை (ப) எண். 161 நாள் : 10.04.2008

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.1, ந.நி.ம.கு.வ துறை, நாள் 04.01.1993
2. உயர்நிலைக்குழு அறிக்கை 2007 பரிந்துரை எண். 35

-----

__ஆணை :__

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 123–(1) இன் படி நகர மக்களுக்குப் பயன்படக்கூடிய நகராட்சி நிதியில் செய்யக்கூடிய எந்த சேவையையும் அரசோ, வேறு உள்ளாட்சி அமைப்போ செய்தால் அந்த செலவை சரிகட்ட நகராட்சி நிதியிலிருந்து அரசு அனுமதி பெற்று வழங்கலாம்.

2) முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், நகராட்சி நிதியில் செய்யக்கூடிய எந்த சேவையையும் செய்ய நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநருக்கும் (ரூ.5000/– வரையும்), நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் (ரூ.5000/–க்கு மேல்) அதிகாரப்பகிர்வு அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3) இதன் தொடர்பாக, சம்பந்தப்பட்ட நகராட்சிகளே இச்செலவினத்தொகையை திரும்ப வழங்கலாம் என்றும் அதற்கென ஆண்டுக்கு ஒரு நிதிவரம்பு நிர்ணயித்துக் கொள்ளலாம் என்றும் உயர்நிலைக்குழு கருதுவதுடன் அதன் அடிப்படையில் பின்வருமாறு நகராட்சிகளுக்கு அதிகாரம் அளித்து நிதிவரம்பு நிர்ணயிக்க பரிந்துரைத்துள்ளது.

| வ.எண். | நகராட்சி நிலை | ஆண்டு செலவு நிதி வரம்பு |
|---|---|---|
| 1. | சிறப்பு நிலை / தேர்வு நிலை | ரூ.50000/– |
| 2. | முதல் நிலை | ரூ.30000/– |
| 3. | இரண்டாம் நிலை | ரூ.20000/– |
| 4. | மூன்றாம் நிலை மற்றும் பேரூராட்சிகள் | ரூ.10000/– |

4) எனவே, மேற்குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை அரசு கவனமுடன் ஆராய்ந்து, அதனை ஏற்று நகராட்சி நிதியில் செய்யக்கூடிய எந்த சேவையையும் நகராட்சிகளே வழங்கலாம் எனவும் இதுகுறித்து மேலே பத்தி-3.ல் குறிப்பிட்டவாறு நிதி வரம்பை நிர்ணயித்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கும், நகராட்சிகள் நிர்வாக ஆணையருக்கும் இச்செலவினத்தை ஈடு செய்தது குறித்த அறிக்கையை அனுப்ப வேண்டும் எனவும் ஆணையிடுகிறது.

5) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 19237/நநிமகுவ/08 -1 நாள் 04.04.2008-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -5.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை 108.
இயக்குநர், உள்ளாட்சி நிதிக் கணக்குகள், சென்னை -108.
மாநில கணக்காயர், சென்னை - 600 018.
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து செயல் அலுவலர்கள் (பேரூராட்சி ஆணையர் வழியாக)
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை -108.

நகல்
நிதித்துறை, சென்னை - 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந2/பொது தேர்தல்கள் /பேரூ.2)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.